2002 மே 9]

(ஆ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002 *ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2002 *ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002 *ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*